ஆண்டு பட்டிகை வழக்கு எண்.27/2026

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. 27/2026 | LW- 2 | PW- 1 | |
| Name | : விஜய் ( கண்ணுற்ற சாட்சி) | | |
| Father's/Husband's Name | : சின்னையா | | |
| Village | : தொந்திலிங்கபுரம் | | |
| Taluk | : மேலூர் | | |
| District | : மதுரை | | |
| Age | : 32/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th day of April 2026

( 1 முதல் 7 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து கூலி வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கின் பட்டியல் முதலாவது சாட்சி ராஜா என் உறவினர் ஆவார். அவர் காலமாகிவிட்டார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக ஒரு நாள் பட்டியல் 4வது சாட்சி முருகேசன் என்பவரின் அக்கா இறந்துவிட்டதாக பட்டியல் 5வது சாட்சி சிவலிங்கம் என்பவர் மங்களப்பட்டியில் உள்ள சாட்சி 4ன் வீட்டிற்கு அழைத்து சென்றார்கள். அப்போது அங்கு வந்த போலீசார் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தீ குளித்த சம்பவம் குறித்து விசாரணைக்கு வந்திருந்ததாக கூறி என்னிடம் விசாரணை செய்தார்கள். மற்ற விபரங்கள் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அனுமதி கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

2. போலீஸ் விசாரணையில் கடந்த 22.06.2025ம் தேதி காலை 10.00 மணியளவில் பச்சையம்மாள் அவரது வீட்டின் முன்பு இருந்தபோது அவ்வழியாக வந்த ஆஜர் 1 முதல் 7 எதிரிகளிடம் பச்சையம்மாள் உங்களை நம்பிதான் PACL India Limited நிறுவனத்தில் ஏஜெண்டாக சேர்ந்து பொதுமக்களிடம் பணம் வசூல் செய்து அதைக் கட்டினேன் என்றும், தற்போது அந்த நிறுவனத்தை மூடிவிட்டதாக சொல்லி பணம் கட்டியவர்கள் என்னிடம் வந்து பணம் கேட்டு தொந்தரவு செய்கிறார்கள் என்றும், உங்களை வந்து பேச சொன்னால் அதற்கு சரியான பதில் சொல்ல மாட்டீங்கிறீங்க என்றும் பச்சையம்மாள் கேட்டதற்கு எதிரிகள் அனைவரும் கோபத்துடன் எங்களுக்கு எதுவும் தெரியாது, எங்ககிட்ட எதுக்குடி பணம் கேட்டு தொந்தரவு பண்ணிக்கிட்டு இருக்கிறாய் என்றும், அசிங்கமான வார்த்தைகளை சொல்லியும் பச்சையம்மாளை பெண் என்றும் பாராமல் பொது வெளியில் வைத்து அசிங்கமாக பேசினார்கள் என்றால் எனக்கு தெரியாது. மேலும் பணம் கொடுத்தவங்க பணம் கேட்டா அதுக்கு நாங்க என்ன பண்ண முடியும், இனிமே இந்த பணம் விசயமாக எங்ககிட்ட பேசினா உன்னை இந்த இடத்திலேயே அடித்து கொள்ளுவோம் என்று மிரட்டிக் கொண்டிருந்தபோது, பச்சையம்மாள் மன உளைச்சலோடு அழுது கொண்டிருந்தார் என்றும், அவ்வழியாக சென்ற நானும், எனது ஊரைச் சேர்ந்த ராமன் மகன் சேவுகன் என்பவரும், மேலும் பெருமாள் மகன் ராஜா என்பவரும் அதைப் பார்த்து பச்சையம்மாளிடம் என்ன பிரச்சனை என்று கேட்டுக் கொண்டிருந்தபோது, எதிரிகள் அங்கிருந்து சென்றுவிட்டதாகவும் பின்னர் நாங்கள் பச்சையம்மாளுக்கு ஆறுதல் சொன்னபோது, அவர் S.P. Office லும், கலெக்டர் ஆபிசிலும் புகார் கொடுக்கப் போவதாக சொல்லிவிட்டு சென்றார் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதால் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.04.09 14:06:20 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.27/2026

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 27/2026 LW- 3 PW- 2

| | |
|---|---|
| Name | : சேவுகன் ( கண்ணுற்ற சாட்சி) |
| Father's/Husband's Name | : ராமன் |
| Village | : சிரங்காட்டுபட்டி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 52/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th day of April 2026

( 1 முதல் 7 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் இறந்துபோன பச்சையம்மாள் என்பவரை தெரியும். இவ்வழக்கின் பட்டியல் முதலாவது சாட்சி ராஜா என்பவரை தெரியும். அவர் காலமாகிவிட்டார். அவர் பச்சையம்மாள் என்பவரின் தம்பி ஆவார். ஆஜர் எதிரிகளில் முத்துச்சாமி, ஆண்டிச்சாமி, துரைராஜ் மற்றும் செல்வம் ஆகியோரை எனக்கு தெரியும். மற்ற எதிரிகளை பார்த்திருக்கிறேன், ஆனால் அவர்கள் பெயர் தெரியாது. சுமார் 6 மாதங்களுக்கு முன்பாக ஒரு நாள் பச்சையம்மாள் என்பவர் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தீ குளித்துவிட்டதாகவும், மறுநாள் இறந்துவிட்டதாகவும் கேள்விப்பட்டேன். எதனால் இறந்தார், என்ன நடந்தது என்ற விபரங்கள் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அனுமதி கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

2. போலீஸ் விசாரணையில் கடந்த 22.06.2025ம் தேதி காலை 10.00 மணியளவில் பச்சையம்மாள் அவரது வீட்டின் முன்பு இருந்தபோது அவ்வழியாக வந்த ஆஜர் 1 முதல் 7 எதிரிகளிடம் பச்சையம்மாள் உங்களை நம்பிதான் PACL India Limited நிறுவனத்தில் ஏஜெண்டாக சேர்ந்து பொதுமக்களிடம் பணம் வசூல் செய்து அதைக் கட்டினேன் என்றும், தற்போது அந்த நிறுவனத்தை மூடிவிட்டதாக சொல்லி பணம் கட்டியவர்கள் என்னிடம் வந்து பணம் கேட்டு தொந்தரவு செய்கிறார்கள் என்றும், உங்களை வந்து பேச சொன்னால் அதற்கு சரியான பதில் சொல்ல மாட்டீங்கிறீங்க என்றும் பச்சையம்மாள் கேட்டதற்கு எதிரிகள் அனைவரும் கோபத்துடன் எங்களுக்கு எதுவும் தெரியாது, எங்ககிட்ட எதுக்குடி பணம் கேட்டு தொந்தரவு பண்ணிக்கிட்டு இருக்கிறாய் என்றும், அசிங்கமான வார்த்தைகளை சொல்லியும் பச்சையம்மாளை பெண் என்றும் பாராமல் பொது வெளியில் வைத்து அசிங்கமாக பேசினார்கள் என்றால் எனக்கு தெரியாது. மேலும் பணம் கொடுத்தவங்க பணம் கேட்டா அதுக்கு நாங்க என்ன பண்ண முடியும், இனிமே இந்த பணம் விசயமாக எங்ககிட்ட பேசினா உன்னை இந்த இடத்திலேயே அடித்து கொள்ளுவோம் என்று மிரட்டிக் கொண்டிருந்தபோது, பச்சையம்மாள் மன உளைச்சலோடு அழுது கொண்டிருந்தார் என்றும், அவ்வழியாக சென்ற நானும், எனது ஊரைச் சேர்ந்த சின்னையா மகன் விஜய் என்பவரும், மேலும் பெருமாள் மகன் ராஜா என்பவரும் அதைப் பார்த்து பச்சையம்மாளிடம் என்ன பிரச்சனை என்று கேட்டுக் கொண்டிருந்தபோது, எதிரிகள் அங்கிருந்து சென்றுவிட்டதாகவும் பின்னர் நாங்கள் பச்சையம்மாளுக்கு ஆறுதல் சொன்னபோது, அவர் S.P. Officeலும், கலெக்டர் ஆபிசிலும் புகார் கொடுக்கப் போவதாக சொல்லிவிட்டு சென்றார் என்றால் சரிதான். அதன் பின்னர் அவர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தீ குளித்து இறந்துவிட்டார் என்று கேள்விபட்டேன் என்று சொல்லிவிட்டு

**தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதால் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.27/2026

## DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 27/2026 LW- 4 PW- 3

| | |
|---|---|
| Name | : முருகேசன் ( பார்வை மகஜர் சாட்சி) |
| Father's/Husband's Name | : பெருமாள் |
| Village | : மங்களப்பட்டி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 40/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th day of April 2026

( 1 முதல் 7 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து கோயம்புத்தூரில் இடியாப்ப கடை நடத்தி வருகிறேன். இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் இறந்துபோன பச்சையம்மாள் என்பவர் எனது உடன்பிறந்த அக்கா ஆவார். அவருடைய கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் எனது அக்கா பச்சையம்மாள் என்பவருடையதாகும். **(புகார் மனுவில் உள்ள புகார்தாரரின் கையொப்பம் அ.த.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது. சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக ஒரு நாள் என் அக்கா வீட்டின் அருகில் போலீசார் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு விசாரணை செய்து என் அக்காவின் வீடு மற்றும் ஊரைப் பற்றிய விபரங்களையும் விசாரணை செய்து சாட்சியாக கையொப்பம்

கேட்டதன் பேரில் நான் கையொப்பம் செய்தேன். **(பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக என் அக்கா தீ குளித்து இறந்தது சம்பந்தமாக பேப்பர் விளம்பரத்தை பார்த்து PACL நிறுவனத்தில் என் அக்கா வேலை செய்தது சம்பந்தமான பிரச்சனையால் இறந்ததாக தெரிந்து கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

2. போலீசார் கையொப்பம் வாங்கிய ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் தெரியாது என்றால் சரிதான். போலீசார் என்னிடம் மதுரை அரசு மருத்துவமனையில் வைத்து கையொப்பம் வாங்கினார் என்றால் சரிதான். மதுரை அரசு மருத்துவமனையில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு இறந்து போன நபர் எனது அக்கா என்பதால் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது அக்கா எதற்காக மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**மறு விசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்